காஞ்சி

# நாடு

## ஆன்றோர் போற்றிய சான்றோர் அம்பேத்கர்

**மாபெரும் பகுத்தறிவுவாதி!**

அநேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமாவார் டாக்டர் அம்பேத்கர்

2368

**அந்தப் பெயரைச் சொல்லி...**

அம்பேத்கர் இருந்த இடமும் தூரமும் மிக அதிகம். எனினும் இங்கு பற்பல இடங்களில் 'அம்பேத்கர் மன்றம்', 'அம்பேத்கர் படிப்பகம்', 'அம்பேத்கர் படத்திறப்பு' என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி உவகை கொள்வதுண்டு நாம்.

ACC-NAL
03370

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ.பரிமளம்.

JL
N92KN
N93.1.10.
217209

# திறனாய்வு

கவிஞர் வேழவேந்தன் அவர்களின் 'தூறலும் சாரலும்' 'ஏக்கங்களின் தாக்கங்கள்' ஆகிய இரண்டு தொகுப்புக்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. கவிஞர் வேழவேந்தன் என்றதும் நமக்கு முதலில் நினைவில் வருவது மாவட்டச் செயலாளர் திரு. எம். கண்ணபிரான் அவர்கள் அடுத்து வருவது அவர் செங்கை மாவட்டத்தைச்சேர்ந்தவர். இளமைக் காலந்தொட்டு கழகக்குடும்பத்தைச் சார்ந்த கொள்கை வீரர் அவர். பேரறிஞர் அண்ணா காலத்தில் வாழ்ந்தவர் மட்டுமல்ல; அவராலேயே பாராட்டப் பட்டவர். பேரறிஞர் அண்ணாவின் இதழ்களான 'திராவிட நாடு' 'காஞ்சி' ஆகிய இதழ்களில் எழுதியவர். அவருடைய தூறலும் சாரலும் கவிதை தொகுப்பு திராவிடர் இயக்கத்தின் ஓர் காலகட்டத்தின் வரலாறு என்பது உண்மை. அதில் பேரறிஞர் அண்ணா பற்றி அவர் பாடிய கவிகைளின் எண்ணிக்கையை பார்க்கும் போது அவர் அண்ணாவின்பால் வைத்திருந்த பற்று தெரிகிறது. ஒவ்வொரு கவிதையிலும் 'அண்ணா திரும்பி வர மாட்டீரா' என வினா தொடுக்கும்போது அவர் அண்ணாவிடம் வைத்திருந்த பாசம் புரிகிறது 'ஒரு முறையாம் திருவிழியால் காண்பதற்கே ஓ வரலாறே! கொஞ்சம் பின்னால் போ. போ!' என்று அண்ணாவை மீண்டும் காண வரலாற்றை பின்னால் போகச் சொல்கிறார். அண்ணாவை இழந்ததை பார்த்து தமிழன்ன[illegible]திருப்பாள் என்க்கூறவரும் கவிஞர் எப்படி வாழ்ந்துவேன் நா[illegible]மகன் பிறக்காவிட்டால், இப்படிப்பட்ட சீர்கள் எவர் தேடி தந்திருப்பார்? என கேட்கிறார். அண்ணனை இழந்து அழுகின்ற கோடான கோடி நெஞ்சங்கள் அங்கே தெரிகின்றன.

'ஏக்கங்களின் தாக்கங்கள் எனும் கவிதை தொகுப்பில் கவிஞர் தான்பிறந்த மண்ணை நினைத்துப் பூரிக்கின்றார். அந்த மண் சாதி சமய மூடநம்பிக்கைக்குள் சிக்கித் தவிப்பதை எண்ணி சாடுகின்றார். புதிய தமிழகத்தை கனவு காண்கிறார். 'தூய கற்பு மணம் கமழ்கின்ற தமிழ்நாட்டில் கருவுற்ற பெருமையெண்ணி மகிழ்கின்றேன் நான் என்கின்றார் தமிழகத்தில் கருவுற்ற பெருமை எனும் கவிதையில் 'நூல்களே நூல்களே' எனும் கவிதையில் 'உலகைக் காட்டும் நுணுக்க மிகு சன்னல்களே! என விரித்து கல்விச் செல்வத்தின் பெருமை சொல்கிறார் தான் பிறந்த செங்கையைப் பற்றி பாடும்போது 'ஈரோட்டு பாதைவழி சென்ற அண்ணா இருந்த மண்ணே 'தமிழகத்தின் முடி தான்' என்போம் என்று ஈறும்புதெய்ந்துகின்றார். இரண்டு நூல்களும் படிக்க. சுவைக்க, பாடம் பெற தமிழ்ச்சமுதாயத்திற்கு தேவையான நூல்கள்,

—பரி—

'தூரலும் சாரலும்' விலை 25/-
'ஏக்கங்களின் தாக்கங்கள்' " 25/-

கிடைக்குமிடம் வேந்தர் பதிப்பகம்
103, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, சென்னை-4.

// காஞ்சி நாடு

மலர்—1 இதழ்—10

திருவள்ளுவர் ஆண்டு 2024 மீனம் (பங்குனி)

புதியதோர் உலகம் செய்வோம்

கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# அன்பில் 'மறைந்தார்

திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரும், நமது பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திருச்சி மாவட்ட புரவலருமான திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கடந்த திங்கள் மறைந்தார் 1—4—1956 தம்பிக்கு கடிதத்தில் 'அம்பில் அழைக்கிறார்' என்கிற தலைப்பில் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதி அவருடைய பணி பற்றிப் பாராட்டினசர். திராவிட முன்னேற்றக்கழகத்தின் 2-வது மாநாடு அப்போது திருச்சியில் நடைபெற்றது, அன்பில் அவர்கள் அப்போது மாவட்டச் செயலாளர் அண்ணா சொல்கிறார். வரவேற்புத் தலைவர் அம்பில் தர்மலிங்கம் பொல்லாத மனிதர்! என்னை எதிரில் வைந்துக் கொண்டே சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டை விட, எங்கள் திருச்சி மாநாடு பன்மடங்கு கவர்ச்சியுள்ளதாக, எழுச்சி மிக்கதாக பயன் தரத்தக்கதாக அமையப்போகிறது என்று கூறுகிறார். நானும் அதை மறுப்பதற்கில்லை' உண்மையை மறைத்திடும் திறமையை நான் எங்கே பெற்றிருக்கிறேன்!' நானும் என் தந்தை பேரறிஞர் அண்ணாவுடன் மாநாட்டு வேலைகளை உடன் இருந்து கவனித்துக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளெல்லாம் என் நினைவில் வருகிறது. நெஞ்சம் கனக்கிறது பேரறிஞர் அண்ணா அவர்களால் தனியாக பெயர் உச்சரிக்கப்பட்டு பாராட்டப்பட்டவர்களில் அண்ணன் அன்பிலும் ஒருவர். அவருடைய இழப்பால் வாடும் அவரது குடும்பத்தாருக்கு நமது பேரவை ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

---

ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ. 25/-

வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் ரூ. 250/-

'காஞ்சி நரடு' இதழ் உறுப்பினராகுங்கள்

நண்பர்களையும் உறுப்பினராக்குங்கள்.

# என்ன படித்தால் வேலை கிடைக்கும்?

பட்டி. சு. செங்குட்டுவன்

சாலையில் ஒரு சந்திப்பு
'எங்கே பிறந்தாய்' ஒருவன் வினவ
தமிழ்நாடென்றான், மற்றவன் உடனே
'என்ன வேலை?'
கேள்வியை எழுப்ப
'சும்மாதாண்ணே'
பதில் சுடச்சுட வந்தது!
'என்ன படித்தாய்?'
'எம்.ஏ. பட்டம்'
அதுதான் வேலையில்லை
ஆணித்தரமாய் பதிலும் வந்தது.
'என்ன படித்தால் வேலை......வேலை கிடைக்கும்?'
கேள்வி வெடிக்க
கேட்டவன் சொன்னான்,
'அய்யாவை படித்தாயா'?
'அண்ணாவை படித்தாயா?'
வெள்ளைச் சட்டையின்
விழிகளில் பிதுக்கம்
மீண்டும் முழக்கம்
'அண்ணாவைப்படி..........அய்யாவைப்படி......வேலை கிடைக்கும். வீட்டில் உள்ளோர்க்கெல்லாம்
எதிரே கிடக்கும் இருட்டைக் கிழித்து எழுந்திடும் கதிரின் வெளிச்சம் காணும் வேலை கிடைக்கும்'.

['புலிகளின் காலம்' கவிதை நூல்]

217209.

---

''தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.''

—டாக்டர் அம்பேத்கர்

# செய்திகள்

**திருநெல்வேலி**

பேரறிஞர் அண்ணா நினைவு நாள் கருத்தரங்கு 28-2-93 ஞாயிறு காலை 10 மணியளவில் திருநெல்வேலி சந்திப்பு, பரணி உணவக கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் திரு. மு. வயலூர்க்குமரன், அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாவட்டச் செயலாளர் திரு. இரா. வேல் முருகன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். துணைத் தலைவர் திரு. சு. சுப்பையா, துணைச் செயலாளர் திரு. குமார், சுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகுத்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் பிரச்சாரப் பாடகர் திரு. நெல்லை ஜி. எஸ். அபுபக்கர் அவர்கள் அண்ணா நினைவு பாடல்களை உணர்ச்சிகரமாக பாடினார்கள். மாநில பகுத்தறிவாளர் கழகத் துணைத் தலைவர் மானமிகு. வை. பாண்டி வளவன் உரையாற்றியதைத் தொடர்ந்து, மாவட்டப் பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் மானமிகு. பேராசிரியர் அறிவழகன் அவர்கள் ''அண்ணாவின் சிறப்புக்களை'' எடுத்துக் கூறி, சிறப்புரையாற்றினார்கள்.

பேரவை செயற்குழு உறுப்பினர் நெடுஞ்சேரலாதன் அவர்கள் நன்றியுரையாற்றினார்கள். கூட்டத்திற்கு, மாவட்ட தி. க. தலைவர் சு. நெல்லையப்பா மாநகரப் ப.க. செயலாளர் இரா. கிருட்டிணன், பொருளாளர் ந. முத்துக்கிருட்டிணன், தொ.மு.ச. திட்டச் செயலாளர் ச. நடராசன், கடையம் வழக்கறிஞர் பால் கனகராசு, தி.மு.க. மாணவர் தலைவர் பொன். பசுங்கிளி, புளியங்குடி இப்பாக்கிரடிசு, வீரவநல்லூர மா. கருணாநிதி, செந்தில் குமார், தச்சநல்லூர் தமிழரசன், த. சு. சங்கரலிங்கம், மா. கண்ணன், தென்கலம் பி. பெருமாள், ஆசிரியர் ம. பாக்கியசாமி, சு. கிருட்டிணன், ஏராகி, ப. பாலகிருட்டிணன், எஸ். சங்கரகணபதி, இ. கணேசன், வெ. இராமகிருட்டிணன், குன்னத்தூர் இசக்கிமுத்து, சே. செல்வராசு, இரா. காசி, நா. திரிபுர சுந்தரம், சு.வ. சுப்பையா, கே.எஸ். வானுவா மலை, ச. முத்தமிழ், வ. மாணிக்கம், இ. முத்தையா, கடையம் செல்வநம்பி, எஸ். சேக் முகம்மது அலி, களங்கபட்டி ஆசிரியர் மோசஸ் சுந்தரம், குருவிகுளம் ஆசிரியர் தி. துரைராசு ஆகியோர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்து சிறப்பித்தனர்.

தரமான அழகிய

வண்ண வண்ண

அச்சு வேலைகளுக்கு

# MALAR PRINTERS
# (OFFSET PRESS)

## மலர் அச்சகம்

7, அவின்யு சாலை, சென்னை-34.

தொ. பெ; 47 85 70

# தென்னகம், பொன்னகம்

—பேரறிஞர் அண்ணா

இடையே ஓர் கதையோ? அது ஏற்றுக்கோ! என்கிறாயா தம்பி! கதை அல்ல. கருத்து விளக்கம், கதை வடிவம்.

கனி பறிக்கச் சென்றவனைக் கருந்தேள் கொட்டிடக், கால்இடறிக் கீழே வீழ்ந்து பாறையிலே மண்டை மோதி, மனம் குழம்பிப்போய்த். தாயைக்கூட அடையாளம் தெரிந்து கொள்ளாதிருந்த மகன்போலப் புகழேணியின் உச்சி சென்ற தமிழ் இனம், நச்சரவம் போன்ற பிற இனத் தொடர்பினால் தாக்கப்பட்டுத் தடுமாறிக் குப்புறக் கீழே வீழ்ந்து, அதிர்ச்சியினால், தன் மரபு குறித்து நினைவும் கெட்டு தாயகம் எது என்பதனையும் மறந்து. மனம் குழம்பி, வேறோர் பூமியினைத் தாயகம் என்று குளறிட நேரிட்டது.

பரணிபாடித் தரணி ஆண்ட தமிழ் இனமல்லவோ, நீ! என்று கேட்ட காலை, ''தாசன் நான்! தமிழில் பேசுகிறேன். எனினும் நான் வணங்கும் தெய்வங்களுக்கு உகந்த மொழி சமஸ்கிருதம், அந்த வட மொழியே, தேவபாஷை! என் நாடு பாரதம், இமயம் முதல் குமரிவரை உள்ளதோர் புண்யபூமி!'' என்று கூறலானான், தடுமாறித் தவித்த தமிழன். விந்தியம் மறந்தான், இமயம் நோக்கித் தொழுதான். காவிரியின் புகழ் பாடத் தயங்கினான்—கரம்புகளைக் கழனிகளாக்கி வாழ்க்கையை வளமாக்கிய பொன்னியை மறந்தான், கண்காணாத் தொலைவினிலே ஓடிடும் கங்கையினைப் புகழ்ந்து, கர்மம் யாவும் நீக்கிடும் புனித கங்கை என்று போற்றிடலானான். சேரனையும் சோழனையும் செந்தமிழ்ப் பாண்டியனையும் தன்முன்னோர் என்று கூறக் கூசினான். இஷ்வாகு பரம்பரை, ரவிகுலச் சோமன், என்று பேசிடத் தலைப்பட்டான். தொல்காப்பியம் என்றால் என்ன? என்று கேட்டிடவும், பாகவதம் படித்திடவும் முற்பட்டான்!

பெற்ற தாயை அறிந்து கொள்ள முடியாமல், ஆப்பம் சுட்டு விற்கும் அன்னம் அல்லவோ? என்று கேட்ட நினைவு இழந்த மகனை விட, இரங்கத்தக்க நிலையினைப் பெற்றான், தமிழன்.

அவன் நிலையினை மேலும், அழுத்தமானதாக்கிடத்தக்கதோர் சூழ்நிலை வேறு உருவாயிற்று; ஆங்கில அரசு நம்மைப் பிடித்துக் கொண்டது. அதனை அகற்றவேண்டி, அனைவரையும் ஒரு முகாமுக்குள் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆகவே, தமிழ் இனம் பிற இனம், தமிழ் மரபு மற்றையோர் மரபு என்பனப்பற்றி பேசவும்,

எண்ணிடவுங்கூட நேரம் இல்லை; வெள்ளையன் அந்நியன்; அந்நியன் விரட்டப்படவேண்டும்; அதற்கு வீரம் மிகவும் வேண்டும்; அறிவாற்றல் கொண்டோர் அனைவரும் ஒன்று திரண்டு நின்றிட வேண்டும்; அ ிலே வடக்கு என்றோ தெற்கு என்றோ பேதம் பேசுதல் ஆகாது, என்று 'தேசியம்' பேசப்பட்டது; அந்தத் 'தேசியம்' ஏற்றுக் கொள்ளவும்பட்டது. எனவேதான், வங்கத்து சட்டர்ஜியும் வலங்கை மான் சத்தாரும், பாஞ்சாலத்து லஜபதியும் பாஞ்சாலங்குறிச்சி சிதம் பரனாரும், அலகாபாத் மோதிலாலும் சேலத்து ஆச்சாரியாரும், பம்பாய்ப் பட்டினத்து வாடியாவும் ஈரோட்டுப் பெரியாரும், கவிஞர் தாகூரும் கர்மவீரர் கலியாணசுந்தரனாரும், முகுந்தலால் சர்க்காரும் சர்க்கரைச் செட்டியாரும்—என்று என்று இப்படிப் பலரும் ஒன்றுபட்டு நின்றனர்; ஒரு பொது நோக்கத்துக்காக; பொது எதிரியை விரட்ட; வெள்ளை ஆட்சியை நீக்கிட.

அதன் பயனாக நன்மை ஒன்று விளைந்தது, வெள்ளை ஆட்சி ஒழிந்தது. எதிர்பாராத வகையில் தீமை ஒன்று வந்துற்றது; தமிழன், தன் இனம், மரபு, நாடு, மறந்ததே அந்தத் தீமை.

அந்தத் தீமையின் விளைவாக ஏற்பட்டதே தடுமாற்றம், அந்தத் தடுமாற்றத்தினால், தமிழன் தமிழ்நாடு என்பதனை மறந்து, பாரத

---

டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டு களுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.

நமது 'குடியரசு' ஏட்டில் என்னென்ன கருத்துகள் வருமோ, அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார், நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டி வந்தேன்.

நமது குடியரசில் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

அம்பேத்கர் சிறப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டா உள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச்சொல்லப் பயப்படும்படியான புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

—தந்தை பெரியார்

நாடு. இந்தியா, என்ற கற்பனைக்கு ஆட்பட்டு, நிலைகெட்டு நிற்கலானான் தம்பி! தம்பிக்கு 15-5-1960

'கன்னித் தமிழ்' என்று புகழ் பாடுகின்றனர், புலவோர் எனினும் ''கற்றிடுக இந்தியினை, பிழைத்திட அதுதான் வழி'' என்கின்றனர் அமைச்சர்கள் அவர்கள் தமிழரே! ஐயமில்லை! ஆயின் அமைச்சராகி உள்ளனர்! அந்த நிலை கெடாதிருக்க, ஆட்டி வைக்கிறபடி ஆடிடும் போக்கினராகிவிட்டனர்!!

ஆச்சரியம், அம்மட்டோடு, இல்லை! எம்மைத்தான் மக்கள் விரும்பி, வாக்களித்து அரசோச்ச ஆணையிடுகின்றனர், என்று வேறு, அவர்கள் மார்தட்டிக் கூறுகின்றனர்; தலை குனிந்து கேட்டுக்கொள்ள வேண்டிய அளவுதான், எண்ணிக்கையில், பிற கட்சிகள் உள்ளன.

மொழியின் நிலையே இது எனின், மற்றத் துறைகளிலே, என்னென்ன கொடுமைகள் ஏற்பட்டுத் தீரும் என்பதனை எடுத்தியம்பத் தான் வேண்டுமா?

★

இந்திமொழி கட்டாயம் இல்லை; திணிக்கப்போவதில்லை; ஆட்சிமொழியாக அவசரப்பட்டு ஆக்கிடப்போவதில்லை; ஆங்கிலத்தை உடனடியாக அறவே நீக்கிடப் போவதுமில்லை; என்று, ஆணவத்தை பதுங்க வைத்துக்கொண்டு, பேசிடக் கேட்கிறோம். எனினும், மெள்ள மெள்ளப் படரும் நோய்போல, இந்தி, எல்லாச் சந்து பொந்துகளிலும் நுழைகிறது, குழைகிறது, நம் தன்மானம் அழிக்கிறது.

தமிழகத்தில் மட்டுமே, இந்தி எதிர்ப்பு என்பது, பட்டுப்போகாத நிலையில், நீறுபூத்த நெருப்பு நிலையில் இருந்து வருகிறது.

வங்கம் போன்ற வேறு சில இடங்களில், வாதாட வல்லுநர்கள் உள்ளனர். வரலாற்றுச் சான்று காட்டிச் சாடுவோர் உள்ளனர், மொழிவளம் பற்றிய விளக்க உரையாற்றி, இந்தி மொழிக்குப் பொது மொழியாகிடும் தகுதி இல்லை என்று எடுத்துக்காட்டுவோர் உளர்—ஆனால், எமக்கு ஏன் இந்தி? எமக்கு ஏன் ஒரு பொதுமொழி? என்று கேட்டிடத் துணிவு எழவில்லை.

சுவிட்சர்லாந்து நாட்டினைக் காட்டி, பல மொழிகள் அங்கு, தேசிய மொழிகளாக உள்ளனவே, அதுபோல, இங்கும், பலமொழிகள் இருக்கட்டுமே, இந்தி மொழிக்கென, ஏன் ஓர் தனித்தகுதி தேடித் தருகிறீர்கள், என்று கேட்டு அறிவு கொளுத்தப் பார்க்கின்றனர்.

இவை அவ்வளவுக்கும், இந்தி புகுத்துவோர். ஒரே வரியில் சமாதானம் கூறுகின்றனர்; ''உமது மொழி அழிக்கப்பட மாட்டாது; இந்திமொழி, உங்கள் தாய்மொழிக்கென உள்ள இடத்தைப் பிடித்துக் கொள்ளாது; இந்தி. அகில—இந்திய உறவுக்காக, அகில—இந்திய ஆட்சியின் வசதிக்காக, அகில—இந்திய அலுவலகங்களுக்குத் துணையாக, இருக்கிறது வேறொன்றுமில்லை; விரண்டுவிட வேண்டாம்; வெகுண்டு எழவேண்டாம்'' என்று கூறுகின்றனர். அதுபோது பாஞ்சாலத்தாராகட்டும், மராட்டியராகட்டும், வங்கத்தாராகட்டும், அந்த வாதம் சரியா, என்பதுபற்றித்தான் ஆராய்கின்றனரேயன்றி, போதுமான பாதுகாப்பு தமது ராஜ்ய மொழிகளுக்கு உள்ளனவா, என்றுதான் கேட்கின்றனரேயன்றி, அகில—இந்திய அலுவலகங்களிலே, இந்தி பேசாதார்களுக்கு ஊறு விளைவிக்கப் படுமா என்று உசாவுகின்றனரேயன்றி. எமக்கு ஏன் அகில—இந்திய ஆட்சி? என்று கேட்கிறார்களில்லை!!

தமிழர், மட்டுமே கேட்கிறோம், அதனை!

தேவையற்ற, தீதுபயக்கும், அகில—இந்திய ஆட்சி எனும் ஏற்பாட்டிலே எங்களைச் சிக்கவைத்தது ஏன்? சிக்க வைத்து விட்டு, அதிலே, இருந்திட வசதி தேவை அல்லவா? அந்த வசதியைப்பெற, இந்தி அவசியமல்லவா? என்று பேசுவது, வெந்த புண்ணிலே வேல் சொருகுவதாகும்—வேண்டாம் இந்த விபரீதம்!—என்று கூறுகிறோம்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஏற்றம் பெற்றது, எமது மொழி! அம்மொழி போதும் எமக்கு, எமது அரசுக்கு! எனினும், தமிழர், தரணி எங்கணும் தொடர்பு கொண்டிட, அறிவு திரட்டிட, வாணிபம் நடாத்திட, உறுதுணையாக, தமிழுடன் உலகப் பொது மொழியாம் ஆங்கிலம் போதும்! என்று உரைக்கிறோம்.

---

'இந்திய மக்களாகிய நாம், இன்று அரசியலில் மகத்துவம் உடையவர்களாகவும், சமூக பொருளாதார வாழ்வில் சமத்துவம் அற்றவர்களாகவும் இருக்கிறோம். நமது அரசு இந்த முரண்பாட்டை விரைவில் போக்கியாக வேண்டும். இல்லையென்றால், யார் இந்தச் சமத்துவமின்மையால் துன்பப்படுகிறார்களோ, அவர்களால் தியாகம் பல புரிந்து உருவாக்கப்பட்ட இந்த ஜனநாயகஅமைப்புதகர்ந்தெறியப்பட்டு விடும்'

தொல்காப்பியம் முதற்கொண்டு, தூதுவரை உள்ள இலக்கியச் செல்வம், தமிழில்உளது!

இனி, ஆங்கில மொழியின் துணைபெறின், அகில உலகப் பேச்சுத் தொடர்புக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும், இன்றுவரை மலர்ந்துள்ள கருத்துக்களை அறிந்து தொடர்புகொள்ள வழி கிடைக்கிறது.

பண்டைய நாட்களில் பாங்குடன் விளங்கிய பாபிலோன், கிரீஸ், ரோம், சீனம்—காணலாம் ஆங்கில மொழி மூலம்!

கன்பூஷியஸ், சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில், காண், மில்—போன்ற மெய்ஞ்ஞானிகளுடன் உரையாடி, உள்ளத்துக்கு உவகை தேடிடலாம், நெறிகளில் நேர்த்தி பெறலாம். ஆங்கில மொழியின் துணையால்.

உமார்கயாம் பாடலின் இனிமை. டாண்டே கவிதையின் கெம்பீரம், மில்டன் கவிதை காட்டிடும் உருக்கம், ஷெல்லி தந்திடும் எழுச்சி யாவும் பெறலாம், இன்புறலாம், பயன்பெறலாம், ஆங்கிலமொழியின் அருந்துணைக்கொண்டு

ஆர்க்கிமிடிஸ், கலிலியோ, நியூடன், ஈன்ஸ்டின், போன்ற விஞ்ஞானிகளின் விளக்கவுரைகளைப் பெறலாம், ஆங்கில மொழியின், துணைகொண்டு.

செனாகா, மார்லோ, ஷேக்ஸ்பியர், பென்ஜான்சன், மாலியர், பெர்னாடுஷா—எனும் உலகப்பெரும் புகழ்பெற்ற நாடகாசிரியர்களின் நல்லுரையாவும். ஆங்கிலம் அளித்திடும்.

ஸ்காட், டிக்கன்ஸ், பால்சாக், மாபாசான்ட். ஜோலா, டால்ஸ்டாய். ஹெமிங்வே, மாகாம். பெர்ல்பக்—என்பவர் போன்றாரின் சுவைமிகு கருத்தூட்டும் கதைகளை ஆங்கிலம் அளிக்கிறது!

> "எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக்கொண்டு, தீயவைகளை நிராகரித்து முன்னேற முயல்கின்றனர்.
>
> —டாக்டர் அம்பேத்கர்.



217209

மாக்கியவல்லியின் நரிக்குணமானாலும், மார்க்க அரேலியரின் வேதாந்தமானாலும், ராபஸ்பயரியின் முறையானாலும், ரூசோ தரும் அரசியல் முறையானாலும், வால்டோ தந்திட்ட புரட்சிக் கருத்தானாலும், லெனின் நடாத்திய புரட்சிப் பெருங்காதையாயினும், எல்லாம் அறிந்திட, அவரவர் எந்தெந்த மொழியினில் எழுதினரோ, அத்தனை மொழிகளையும் கற்றுத் தீரவேண்டும் என்றில்லை—ஆங்கிலம் அறிந்திடின் அவை அனைத்தையும் அறியலாம்.

அலெக்ஸாண்டரின் படையெடுப்பிலிருந்து, அட்லியின் ஓய்வு வரையில், செங்கிஸ்கானின் வெறிச் செயலிலிருந்து நாசரின் வெற்றி வரையில் ஹுவான்சுவாங் நடத்திய பயணத்திலிருந்து தலாய்லாமாவின் 'விஜயம்' வரையில், ஆங்கிலம் அறிவிக்கிறது.

நெப்போலியனுடன் நடமாடலாம், நெல்சனுடன் உரையாடலாம் கிளகஸ்டனைக் காணலாம், கிராம்வெலிடம் பேசலாம், மாஜினியைக் கண்டு விடுதலையின் மேன்மை பற்றிய விளக்கம் பெறலாம், கரிபால்டியைக் கண்டு வீரச்செயலுக்குத் தேவையான உணர்ச்சியைப் பெறலாம், சிசிரோவின் முழக்கம் டெமாஸ்தனிசின் பேராற்றல், கேட்கலாம் ஆங்கிலத்தின் துணையுடன்.

ஆங்கிலத்தின் துணையுடன் அக்ராவில் நடமாடலாம், ஆக்ராவிலும் உரையாடலாம், பீகிங்கில் பேசலாம் பாரிசில் உலவலாம், மாட்ரிட்டானாலும் மாஸ்கோவானாலும், ஆட்டவாவானாலும் அங்காரா ஆனாலும், நேபிள்ஸ் நகரானாலும் ரோம் நகர் எனினும், வாஷிங்டனானாலும் டப்ளினானாலும், கற்றோர் உலாவும் எந்த இடமும் சென்று உறவாடலாம், உரையாடலாம், ஆங்கிலம் தெரிந்தால்!

நிலை இங்ஙனமிருக்க, இந்தியை, நேரு துரைத்தனத்தார், ஏன் தூக்கித் தலைமீது வைத்து சுமந்திடச் சொல்கின்றனர்? அகில இந்தியா எனும், ஏகாதிபத்தியத்துக்கு அது முத்திரை மொழி! அந்த முத்திரை பொறிக்கப்பட்டவர்களெல்லாம் டில்லியின் அடிமைகள்

---

ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க அமைப்பு மட்டுமல்ல: அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு ஒன்றுபட்டு வாழும் வழி அது; முக்கியமாகச் சக மனிதர்களிடம் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளுகின்ற மனப்பாங்கே அது.

என்பது பொருள். அதற்காகவே இந்தியை ஏற்றுக் கொண்டாட வேண்டும் என்கின்றனர். 22—5—1960

ஆட்சி மொழி அந்தஸ்தை பொறுத்தவரையில் தமிழ்தான் தமிழகத்தில் ஆட்சி மொழி.

இந்தியாவில் நிர்வாகமொழி எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்தப்பிரச்சினையை மூன்று விதமாக நோக்கலாம். இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் இப்பிரச்சனையை பார்ப்பது ஒரு விதம்.

இரண்டாவது இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கப்போவதில்லை; அது பிரியப் போகிறது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு. பிரியும்வரை உள்ள இடைக்காலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று பார்ப்பது ஆகும். எங்களைப் பொறுத்தவரையில் இந்தியா பிரியப்போகிறது. என்ற எண்ணத்துடன்தான், இப்பிரச்சினையை நாங்கள் அணுகுகிறோம்,

நிர்வாகத்தில் மந்ய சர்க்காரிடம் எந்தெந்த பொறுப்புக்களை மாத்திரம் ஒப்படைக்கலாம் என்று பார்த்து அவர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொறுப்புகளை குறைத்து விட்டால் அப்போது மத்ய அரசாங்க நிர்வாக மொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன் இப்பிரச்சினையை அணுதவது மூன்றாவது விதமாகும்......... தம்பிக்கு 14—8—1960

---


# 'நாடு'

ஓர் ஆண்டு நன்கொடை ரூ. 25/-
வாழ்நாள் நன்கொடை ரூ. 250/-

நாடு இதழ் விற்பனையில் எங்களுக்குத் துணை புரியுங்கள் வாழ்நாள் உறுப்பினராகுங்கள்.


---

கூட்டு நடவடிக்கைகளில் தனி மனிதரைப் பங்குதாரராகவோ கூட்டு உறுப்பினராகவோ செய்வதன் மூலம், அவர் அந்நடவடிக்கைகளில் வெற்றியைத் தனது வெற்றியாகவும் தோல்வியாகவும் உணர்கிறார். அந்த உணர்வே உண்மையில் மக்கள் ஒன்றிணைந்த சமுதாயத்தை உருவாக்கும்.

Dr. அம்பேத்கார்.

# அண்ணாவை மறந்து விட்டார்களா?

ஓர் அலசல் எனும் தலைப்பில் 'கல்கி' இதழிம் (3—2—93) ஓர் உரையாடல் கட்டுரை வடிவில் வந்திருக்கிறது. அதன் சாரத்தை கீழே கொடுத்திருக்கிறாம். பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை தொடங்கியபோது நாம் வெளியிட்ட கருத்தை எதிரொலிப்பதாக இருக்கிறது. இக்கட்டுரை இன்றைய இளைய சமுதாயத்திற்கு அண்ணாவின் கொள்கைகள் சரிவர எடுத்துச் சொல்லப்படவில்லை என்பதையே இதில் கலந்து கொண்ட மாணவ மணிகள் வெளிபிடுகிறார்கள். அதன் சாரத்தை இங்கே தருகிறோம்.

நன்றி—கல்கி

பிப்ரவரிமூன்றாம்தேதியோடு அறிஞர் அண்ணா மறைந்து 24 ஆண்டுகள் ஆகின்ற நிலையில் அவர் இன்னும் நினைக்கப்படுகிறாரா அல்லது மற்றக்கப்பட்டு விட்டாரா?

சென்னை பல்கலைக் கழகத்தில் அரசியல் சித்தாந்தத்தைப் (Political Philosophy) பாடமாக எடுத்துஎம்.ஏ படிக்கும்ஜெ.பிரேம் பாஷானி, ஜி. முத்து, திருமதி கண்மணி தனசேகர், பி. பிரவீன் குமார் ஆகியோர் விவாதித்தனர். அந்த விவாதத்திற்கு சென்னை பல்கலைக் கழகத்தின் அரசியல் மற்றும்பொதுநிர்வாகத்துறையில் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் சி.ஏ.பெருமாள் தலைமை தாங்கினார்.

கண்மணி : அண்ணாவை இன்னும் மக்கள் நினைவில் கொண்டுள்ளனர் என்றுதான்கூற வேண்டும். பணமும் பட்டமும் உள்ளவன்தான் இந்நாட்டை ஆள வேண்டும் என்கிற நிலையை மாற்றி ஒரு சாதாரணக் குடிமகனும் ஆட்சிக்கு வரலாம் என்பது நம் தேசம் சுதந்திரம் பெற்றதுமே உருவாகிவிட்டது. ஆயினும் தமிழக அரசியலில் ஒரு தி ப்புமுனையை ஏற்படுத்தியவர் அண்ணா தான். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட கட்சி என்றுதான் ஆகிறது. வேறு என்ன நிருபணம் வேண்டும்?

முத்து : உங்கள் வாதத்தை ஏற்க முடியாது. மக்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டுமானால் மக்களின் இன்னல்களை உணர்ந்தவன் ஆட்சியில் அமரவேண்டும் என்று உணர்த்தியவர் அண்ணா. ஆனால் இன்றைய அரசியல்வாதிகள் இதனை மறந்து, பணத்திற்காகவும் அதிகார பலத்துக்காகவும் அரசியலையும், ஆட்சியையும் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். மக்களுக்குச் சேவை

என்பது பின்தள்ளப்பட்டுவிட்டது. அதனால் தான் சொல்கிறேன் அண்ணா பாரம்பரியத்தில் வந்தவர்கள் ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்களே தவிர, அண்ணாவை மறந்து விட்டார்கள் என்று!

பிரேம் : ஜனநாயகத்தின் சிறப்பினை எளிய மக்களுக்கும் புரிய வைத்தவர் அண்ணா. தாங்கள் மனம் வைத்தால் ஓர் ஆட்சியைத் தூக்கி எறிந்து விட்டு வேறு ஒரு கட்சி ஆட்சியை ஏற்படுத்தலாம் என்று தங்களிடம் உள்ள பலம் வாய்ந்த சக்தியை மக்களுக்குப் புரிய வைத்தார். இன்றும் இந்நிலைதான் தொடர்கிறது... மக்கள், அண்ணா கற்றுத் தந்ததை மறவாமல் மறுபடி ஆட்சி மாற்றம் செய்தார்களே!

பிரவீன்குமார் : இன்றும் இந்நிலை நீடிக்கிறது என்று ஒப்புக் கொண்டாலும், இச்சக்தியை மக்களுக்கு உணர்த்தியவர் அண்ணாதான் என்று எத்தனை பேர் நினைக்கிறார்கள்? நம்மை போன்ற இளைய தலைமுறையினருக்கு அண்ணாவின் குண இயல்புகளையும், திறமைகளையும், சேவைகளையும், தீர்க்க தரிசனங்களையும், அவரது பாரம்பரியத்தில் ஆட்சிக்கு வந்தவர்கள் சரியாக வெளிச்சம் போட்டுக் காட்டத் தவறி விட்டனர் என்று கூறத்தான் வேண்டியிருக்கிறது!

கண்மணி: இவ் வாதத்தை ஏற்க முடியாது. வறுமைக் கோட்டில் உள்ள மக்களுக்காக, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், 'ரூபாய்க்கு ஒருபடி அரிசி' எனும் சமுதாய நலத் திட்டத்தை அண்ணா அமுலுக்குக் கொண்டு வந்தார். இன்றையச் சூழலில் அவ்வளவு மலிவாக உணவுப் பொருள் விநியோகம் செய்ய முடியாது என்றாலும் இன்றும் ம களுக்கு அரசின் நியாய விலைக் கடைகள் மூலம் மலிவு விலையில் அரிசி மற்றும் சில அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றனவே.

முத்து : ஆனால், இதற்கு அஸ்திவாரம் அமைத்தவர் அண்ணாதான் என்று இன்றைய அரசியல்வாதிகள் சொல்வதாகத் தெரியவில்லையே! இதற்கெல்லாம் மக்கள் 'வரிப்பணம் பயனாவதைக்கூட மறைத்து ஏதோ தங்கள் திட்டம்போல தங்களைப் பிரபலப்படுத்திக் கொள்ளத்தானே இலவசங்களைக்கூட வழங்குகிறார்கள்!

கண்மணி: நாம் இன்னொரு துறையைப் பற்றியும் கவனித்தாக வேண்டும். பெண் சீர்திருத்தத்திலும், பெண்கள் முன்னேற்றத்திலும் அண்ணா பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். வேலைக்காரி போன்ற படங்களில் அவர் படைத்த பாத்திரங்கள், வசனங்கள் மூலம் இதை உணரமுடியும். அரசியலிலும், அரசிலும் பெண்க்ளுக்இக் கௌரவமான பங்கினை அவர் அளித்தார். அவரது நினைவைப் போற்றும் விதமாகத் தான் மக்கள் இன்று ஒரு பெண்

மணியை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

முத்து : ஒரு பெண்மணி தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று நானும் மகிழ்கிறேன். அந்தப் பெண்மணியும் பல பெண் அமைச்சர்களுக்கும் எம்.எல்.ஏக்களுக்கும் இடமளித் திருக்கிறார். ஆனால் அண்ணா காட்டிய வழியில் இவர்கள் செல் கிறார்களா என்பதுதான் முக் கியம். உதாரணமாக அண்ணா காலத்தில் மதுவிலக்கு அமுலில் இருந்தது. அதை நீக்கக் கூறப் பட்ட ஆலோசனைகளை அவர் ஏற்கவில்லை. அவர் காலத்துக் குப் பிறகு என்ன ஆயிற்று? இப்போது எப்படி நடக்கிறது? எல்லாம் நமக்குத் தெரியும். இங்கே நான் யாரையும் தனிப் பட்ட முறையில் விமர்ச்சிக்க வில்லை.ஆனாலும் அண்ணாவின் கொள்கைகள் படிப்படியாக மறக் கப்பட்டு வருகின்றன என்பதைத் தான் வலியுறுத்த விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் ஆலய வழிபாடு அண்ணாவுக்கு ஏற்ற கொள்கையல்ல. இன்று அவரது பாரம்பரியத்தில் வந்தவர் ஙள் எந்த அளவுக்கு அண்ணா வின் கொள்கையைப் பின்பற்று கிறார்கள் என்று நீங்கள் அறியாததல்ல!

பிரேம்: கால மாற்றத்திற்கு ஏற்ப சில கொள்ள மாற்றங்களும் நேரத்தான் செய்கின்றன! அண்ணாவே மாறவில்லையா? தனித் தமிழ்நாடு கோரிக்கையைக் கைவிடவில்லையா?

கண்மணி தமிழை ஆட்சி மொழியாக்கினவர் அண்ணா. அவரது தமிழ்ப் பற்றை இன்றும் மறக்காமல் இருக்கிறார்களே! பள்ளிகளில் தொடங்கி, ஆராய்ச்சி நிலைவரை தமிழ், பாட மொழி யாகப் பின்பற்றப்படுகிறதே!

முத்து: தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்காமல் ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்டு இயங்கும் தனியார் பள்ளிகள்தான் தமிழ் நாட்டில் இன்று ஏராளம் உள்ளன. பணத்தை வாரி இறைத்து இப் பள்ளிகளில் தங்கள் பிள்ளை களைச் சேர்த்து படிக்க வைப் பதைத்தான் கௌரவமாக மக்கள் கருதுகின்றனர். அண்ணாவின் வழியில் வந்துள்ள பல அரசியல் வாதிகளும் இதில் அடங்குவர்!

பிரவின் : அகில இந்திய அளவில் வேலை வாய்ப்புக்காக ஆங்கில அறிவைப் பெருக்கிக் கொள்ள பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் சேர்க்கின்றார்கள். இதில் தவறிருப்பதாகத் தெரிய வில்லை.

பிரேம்: அண்ணாவே ஆங் கிலப் புலமை மிக்கவர்தான். ஆங்கிலத்தின் எதிரியும் அல்ல. இருமொழித் திட்டத்தின் சிற்பி அவர்.

முத்து : ஆயினும் சொந்த சௌகர்யத்துக்காக தமிழ்மொழிப்

பற்றைக் காற்றில் பறக்க விடுவோருடன் அண்ணாவின் நிலையை ஒப்பிட முடியாது!

டாக்டர் பெருமாள் : 'தென்னாட்டின் பெர்னாட் ஷா' என்னும் பட்டத்தை அண்ணா அவர்களுக்கு 'கல்கி' அவர்கள்தான் சூட்டினார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன்!

முத்து : பெரும்பாலான இளைய தலைமுறையினருக்கு அண்ணாவைப்பற்றிய இத்தகைய செய்திகள் எல்லாம் நிச்சயம் தெரியாது என்று திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். அண்ணா ஓர் அரசியல்வாதி. திராவிட பாரம்பரியத்தில் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த முதல் முதலமைச்சர் என்ற அளவில்தான் இளைய சமுதாயத்தினருக்குத் தெரிந்திருக்கிறது அண்ணாவின் புலமை, முதிர்ந்த அறிவாற்றல், எழுத்தாற்றல், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்ன கண்ணியம், அனைவரையும் அணைத்துச்செல்லும் யதார்த்த மனப்பான்மை ஆகியவை இன்றைய தலைமுறைக்குச் சரியாகத் தெரியப் படுத்தப்படவில்லை...... தெரியப் படுத்தத் தவறிவிட்டார்கள் என்றுதான் கூறுவேன்!

பிரவீன் : இன்னொன்று... அண்ணா பிராமணர்களை என்

---

# மதக்கொடுமையா? மதுக்கொடுமையா?

மதமான பேய்ப்பிடியா திருக்கத்தான் வள்ளலாரும்
மன்னிதமி ழெடுத்தும னங்குளிரப் பாடினரன்றே!
இன்றோஇந் துமதமெனும் பேய்பிடித்து இருப்பவரை
இன்னுலகே கச்செய்தே இறுமாப்புக் கொள்கிறதே!
மதுமாது இவையெல்லாம் தொட்டாரை வாட்டிவிடும்
மதமான பேயோ? தொட் டார்! தொடார்! அனைவரையும்
அனலிடையி ட்டபுழுவென ஆக்கித்தான் மகிழ்ந்திடுதே!
இன்றேற்பட் டநிலையோ அன்றுதொட்டு இன்றுவரை
என்றுமேஇந் நாடதனில் ஏற்றந்தான் பெறக்காணோம்!
இந்துவாயி ருஎன்பன்வும் இந்தியனா யிருஎன்பது(வும்)
இம்மண்ண தனில்என்று மேவேண்டாம் எனின்நன்றே!
மதுமாது மண்ணதனில் மாக்கொடுமை என்றிட்டால்
மதக்கொடுமை அம்மம்மா! மாக்கொடுமை என்போமே!

புலவர் : பி. சி. கணேசன்

றுமே எதிர்த்ததில்லை... பிராமணீயத்தைத்தான் எதிர்த்தார் ...

முத்து : அதாவது உயர்ஜாதி. கீழ் ஜாதி என்னும் பாகுபாடு, ஒதுக்கப்படுதல். தீண்டாமை

போன்ற அநாகரீகங்களை!

கண்மணி : அண்ணாவின் இக் கொள்கையை மக்கள் மனதில் இன்றும் கொண்டுள்ளதனால் தான் ஒரு பிராமணப் பெண்மணியை மக்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்து உள்ளனர்... தற்போது இத்தகைய வேற்றுமைகள் சமுதாயத்தில் அதிகம் இல்லாததே அவரது நினைவுக்குச் சான்று தானே! எனவே அண்ணாவை மறந்து விட்டார்கள் என்று கூறிவிடமுடியாது!

முத்து : மறந்து விட்டார்கள் என்று நிச்சயம் கூற முடியும்...... வானொலியிலும் டெலிவிஷனிலும் இந்தி எட்டிப் பார்த்து ஆக்ரமிப்பு செய்யத் தொடங்கிவிட்டது. அதை வன்மையாக எதிர்ப்பவர் இல்லை தமிழக அரசியலில் பண ஆதிக்கம் கை ஓங்கிச் சேவை மனப்பான்மை மறைந்துவிட்டது. மாற்றுக் கட்சியினரை மதிக்கும் அரசியல் கண்ணியத்தைத் தேடினாலும் கண்டுபிடிப்பது கடினமாகி விட்டது எளிமையான வாழ்க்கை என்றால் என்ன என்று இன்றைய அரசியல்வாதிகள் கேட்கும்படியான நிலையில் இருக்கிறார்கள்... சில எம்.எல்.ஏக்களைப் பற்றியெல்லாம் வரும் செய்திகளைப் பார்க்கும்போது கடமையுணர்வும், கட்டுப்பாடும் அண்ணாவின் காலக்கட்டத்தோடு காணாமல் போய்விட்டன என்று தான் கூறவேண்டி உள்ளது! இல்லாவிட்டால் வலுக்கட்டாயமாகக் கைதிகளை விடுவித்த எம். எல். ஏயை போலீஸார் தேட வேண்டிய நிலை வருமா?

டாக்டர் பெருமாள் : இன்றைய நிலையில் எந்த வழிமுறைகள் மூலம் அண்ணாவைப் பற்றிய சிறப்புகளை மக்களிடையே பரப்ப முடியும் என்கிறீர்கள்?

முத்து : அண்ணாவின் கொள்கைகளைப்பற்றி ஆய்வு செய்வதாலோ வேறு வகை வகையான பிரசாரத்தாலோ மட்டும் ஒரு பயனும் விளையாது இவற்றுடன் சேர்ந்து ஆட்சியாளர்களும் மக்கள் பிரதிநிதிகளும் அண்ணாவின் கொள்கைகளை அனுசரித்து நடந்து முன்னுதாரணமாகத்திகழ வேண்டும். இது இல்லாமல் வெறும்பிரசாரம் மட்டும் என்றால் மக்களைச் சென்றடையாது. மக்களும் திசை தவறித்தான் போவார்கள்.

டாக்டர் பெருமாள் : அண்ணா ஒரு தமிழ்த் தலைவன் மட்டுமல்ல. குறுகிய எல்லைகளைக் கடந்த மக்கள் தலைவன் என்கிற உணர்வோடு அவரது நினைவைக் காக்க மக்களும் தலைவர்களும் பாடுபட வேண்டும். அரசியல் சார்பற்ற அணுகுமுறைதான் இதற்கு உதவ முடியும்.

# திரட்டு

ஈழத் தமிழர்கள்மீது முப்படைத் தாக்குதல் :

## அய். நா. தலையிடக் கோரி விடுதலைப் புலிகள் வற்புறுத்தல்

விடுதலைப்புலி தலைவர் பிரபாகரன் சமீபத்தில் பி. பி சி. வானொலிக்கு பேட்டி அளித்தார். அதில் வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த கூட்டாட்சி அமைக்கப்படுமானால், அது பற்றிய சமரச திட்டத்தை பரிசீலிக்கத் தயார் என்று கூறியிருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில் பி.பி.சிக்கு இலங்கை குடியரசுத் தலைவர் பிரேமதாசாவும் ஒரு பேட்டி அளித்தார். அதில் ''ஈழப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண விரும்புகிறோம். பிரபாகரன் சமரச திட்டம் அனுப்பினால் அதை எம்,பிக்கள் குழு பரிசீலிக்கும்'' என்று கூறியிருந்தார். ஆனரல், ஈழப் பிரச்சினையில் அய்க்கிய நாடுகள் சபை தலையிட வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் பிரச்சிகைக்கு தீர்வுகாண எங்களால் முடியும் என்று பிரேமதாசா கூறினார்.

ஆனால், விடுதலைப்புலிகள் அய்.நா. சபை தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்றே விரும்புகிறார்கள். இதற்காக 10 லட்சம் ஈழத் தமிழர்களிடம் கையெழுத்து வரங்கி மனு தயாரிக்கும் முயற்சியில் புலிகள் இயக்கம் ஈடுபட்டு உள்ளது. தமிழர் பகுதியில் கையெழுத்து வேட்டை தீவிரமாக நடந்து வருகிறது. ஈழப் பிரச்சினையில் அய். நா. சபை தலையிட்டு தீர்வு காணவேண்டும் எனக் கோரும் இந்த மனு விரைவில் அய். நா. சபைக்கு அனுப்பப்படும் என்று தெரிகிறது.

இதற்கிடையில் தமிழீழ பகுதியில் விமானங்கள் துணையுடன்

இலங்கை ராணுவம் முப்படை தாக்குதலையும் நடத்தி வருகிறது. வடக்கு வவுனியா, வடமேற்கு மன்னார் மாவட்டம் ஆகியவற்றில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இந்த பகுதியில் நேற்று காலை போர் விமானங்கள் துணையுடன் ராணுவத்தினர் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களிலும் முகாம் களிலும் பயங்கரத் தாக்குதல் நடத்தினார்கள்.

# இலங்கை வானொலியில் பேரறிஞர் அண்ணா பற்றி டாக்டர் C.N.A. பரிமளம் பேட்டி

கடந்த 4—3—93 மாலை 5-30 மணிக்கு பேரறிஞர் அண்ணாபற்றி டாக்டர் C.N.A. பரிமளம் அளித்த 'பேட்டி ஒலி பரப்பானது. பேட்டி அதற்கு முதல் நாள் தொலைபேசியிலேயே எடுக்கப்பட்டது. பேட்டி கண்டவர் திரு. K. S. ராஜா. பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால் சில கேள்விகளுக்கான பதில் மட்டும் ஒலி பரப்பப்பட்டன-நேரம் கருதி.

இலங்கை வானொலியின் சர்வதேச ஒலி பரப்பில் 'மக்கள் குரல்' எனும் தலைப்பில் இப்பேட்டி ஒலி பரப்பப்பட்டது. பேட்டியின் தொடக்கத்தில் அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவில் ஒரு பகுதி ஒலி பரப்பப்பட்டது. அறிஞர் அண்ணாவின் குரலை கேட்பதே மன திற்கு சுகமாக இருந்தது.

கேள்வி : பேரறிஞர் அண்ணாவின் மகனும், எழுத்தாளருமான டாக்டர் பரிமளம் அவர்களே வணக்கம்

பதில் : வணக்கம்

கேள்வி : இப்போதைக்கு தாங்கள் ஆற்றும் பணியென்ன.

பதில் : நான் ஒரு தோல் நோய் மருத்துவன். நான் இப்போது பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை எனும் ஓர் அமைப்பை தமிழ் நாட்டில் நடத்தி வருகிறேன். அதன் மூலம் பேரறிஞர் அண்ணாவின் எழுத்துக்களை இன்றைய இளைய சமுதாயத்திற்கு கொண்டு செல்லும் பணியை செய்து வருகிறேன்.

கேள்வி : ஒரு எழுத்தாளர் என்கிற வகையில் இன்றைய தமிழ் இலக்கியத்தின் நிலை என்ன.

பதில் : இன்றைய தமிழ் இலக்கியம் சமுதாயத்திற்கு பாடுபட

வேண்டும் என்பது என் எண்ணம். முந்தைய நமது தலைவர்கள் தமிழ் இலக்கியத்தை சமுதாய மேம்பாட்டுக்குத்தான் பயன் படுத்தினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இலக்கியம் படைத்ததுகூட இந்த தமிழ்ச் சமுதாயம் சாதி மதம் இவைகளால் வேறுபட்டிருந்த சமுதாயம் மேம்படவேண்டும், தெளிவு பெற வேண்டும். மூட நம்பிக்கை இவைகளில் இருந்து விடுபட வேண்டும் என்று தான் எண்ணி செயல்பட்டார்கள். அதைத்தான் இன்றைக்கும் நான் இலக்கியவாதிகளிடமிருந்து எதிர் பார்க்கின்றேன்.

கேள்வி : உங்கள் தந்தையார் பேரறிஞர் அண்ணாவை பற்றிய மறக்க முடியாத சம்பவங்களை நமது நேயர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?

பதில் : அண்ணா அவர்கள் உலகத்திற்கு ஒரு பெரிய அரசியல் வாதியாக அறிமுகமானவர். ஆனால் அவர் எவ்வளவு எளிமையாக வாழ்ந்தார் என்பது பலருக்குத் தெரியாது. அண்ணா அவர்கள் முதல்வர் ஆனதும் தனக்குத் தரப்பட்ட 'படகு காரை' வேண்டாமெனச் சொன்னவர் முதல்வருக்கு தரப்பட்ட 'செக்யூரிட்டி' எனும் காவல்காரர் வீட்டுக்கு முன் நிற்பதை பழக்கத்தை வேண்டாம் என திருப்பி அனுப்பியவர். முதல்வரானதும் வீட்டுக்கு வந்த அலங்கார 'சோபாக்'களை வேண்டாம் என திருப்பி அனுப்பியவர். இவை வரும்போது மகிழ்ச்சியாக இருக்கும், போகும் போது இதை தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் வருவது கடினம் என என் அன்னையாருக்கு அறிவுரைத்தவர். நம்மிடம் இருப்பதைக்கொண்டு வாழ, திருப்தியடைய கற்றுக்கொள்ள வேண்டும் எனச் சொன்னவர்.

கேள்வி : தமிழக மக்களுக்காக ஓய்வின்றி உழைத்த அண்ணா தந்தை என்ற முறையில் உங்கள் குடும்பத்திற்கு நேரம்

---

## வன்முறையா தீர்வு

(வெண்பா)

சாதி மதந்தன்னை சாடிப் பகுத்தறிவால்
வேந்யர் கூற்றை வெறுத்தொதுக்கி—நீதியிலா
தென்றும் தொடர்கின்ற சண்டைகள் தீர்ந்திட
வன்முறையா தீர்வு வழி?

—இனமானக் கவிஞர் இடிமுரசார்

ஒதுக்க முடிந்திருக்காதே, அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில் : நீங்கள் சொல்வது முழுவதும் உண்மை. அண்ணா அவர்கள் இந்தச் சமுதாயத்திற்காக தன்னை சந்தனம்போல் தேய்த்துக் கொண்டவர் என்பது யாவரும் அறிந்ததே. அண்ணா குடும்பத்திற்கு என்று நேரம் ஒதுக்கியதே மிக மிக குறைவு. நான் குழந்தையாய் இருந்தபோது அவரை நான் சந்திப்பதே ஒரு மாதத்துக்கு ஒரு முறையாகத் தான் இருக்கும். நான் SSLC படிக்கும்போது, யாரோ அவரை நான் என்ன படிக்கிறேன் என்று கேட்டபோது, தெரியாமல் இருந்திருக்கிறார். அவருக்கு முதலில் நாடு. பிறகு தான் வீடு.

கேள்வி : பெண்கள் அரசியலில் ஈடுபடுவது பற்றிய உங்கள் கருத்தென்ன?

பதில் : பெண்களுக்கு படிப்பறிவு வேண்டுமென்று நமது இயக்கங்கள் தொடக்கக் காலத்தில் இருந்து சொல்லிக்கொண்டு வருவது தெரிந்ததே. அரசியலில் பெண்கள் ஈடுபடுவது தேவைதான், ஏனென்றால் ஒரு சமூகம் எழுவதும் வீழ்வதும் பெண்கள் கையில் உண்டு எனும் நம்பிக்கை உள்ளவன் நான்.

கேள்வி : உங்கள் எழுதுகோலின் கடமையாக எதை கருதுகிறீர்கள்?

பதில் : நான் மூன்னமே சொன்னபடி ஒருவன் எழுது கோலை எடுக்கிறான் என்றால் அதற்கு பின்னாலே ஓர் காரணம் இருக்கவேண்டும். அது தன் இனத்துக்காக, மொழிக்காக நாட்டுக்காக எழுத வேண்டும். சமுதாய எழுச்சிக்காக, சமுதாயம் சாதி, மதம் மூடநம்பிக்கைகள் இவைகளிலிருந்து விடுபட நாம் எழுதுகோலை பயன்படுத்த வேண்டும். அதைத்தான் நான் செய்கிறேன்.

கேள்வி : திரைப்பாடல்களில் தங்களுக்கு பிடித்த பாடல் எது? ஏன்?

பதில் : அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும். அது ஆணவச் சிரிப்பு எனும் பாடல். ஏனென்றால் அது வர்க்க போராட்டத்தை சித்தரிக்கும் பாடல்.

கேள்வி : 'மக்கள் குரல்' நிகழ்ச்சிக்கு பேட்டியளித்த பேரறிஞர் அண்ணாவின் மகனும், தமிழ் நாட்டின் எழுத்தாளருமான டாக்டர் பரிமளம் அவர்களுக்கு நன்றியையும், வாழ்த்தையும் வணக்கத்தையும் கூறி விடை பெறுகிறோம். வணக்கம் பரிமளம் அவர்களே.

பதில் : வணக்கம். இலங்கைத் தமிழர்களுக்கு என் நன்றி வணக்கம்.

# அண்ணாவின் தன் வரலாறு

டாக்டர் C.N.A. பரிமளம்

நானொன்றும் தம்பி பத்துகெஜ தூரத்திலே இருந்து அவரை (பெரியாரை) பார்த்தவனல்லன். பக்கத்திலேயே பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்தவன்—பல பிரச்சினைகள் குறித்து அவருடைய பிரத்யோக கருத்துகளை அறிந்தவன்—'மேஸ்திரி' வேலை பார்த்திருக்கிறேன்.

தம்பிக்கு 7—8—1955

தம்பி,

சில தினங்களுக்கு முன்னர் நேரு பண்டிதர் ஹரித்துவார் எனும் ஊருக்குச் சென்றிருந்தார்; இமயமலையின் அடிவாரத்திலே இருக்கிறது இந்த ஊர்; இந்துக்கள் இதைப் புண்ணியஸ்தலம் என்று கொண்டாடுகிறார்கள். இங்கு வந்து இமயத்திலே இருக்கும் ரிஷிகேசம் போன்ற ஸ்தலங்களுக்குப் போகிறார்கள். சிறிய ஊர் தான். நான் அங்குப் பத்து நாட்களுக்குமேல் தங்கியிருந்திருக்கிறேன், பெரியாரின் அன்புக்கு பாத்திரனாக இருந்தபோது! அந்தப் பழைய நாட்களில். அப்போது நான் ''விடுதலை''யில் எழுத்தாளன். பெரியாருடன் வரும் பேச்சாளன். ஆமாம், மறந்து போகிறேன் பார் தம்பி, திராவிடர் கழகச் செயலாளனாகவும் இருந்து வந்தேன். பார்ப்பனரை இந்த நாட்டை விட்டு ஓட்டும் ஒரே அபார சேவை செய்வதற்காகவே. இன்று அல்லும் பகலும் கடுமையாக நோயைத் தாங்கிக்கொண்டு, எவ்வளவோ லாபகரமான தொழில்கள் வருந்தி அழைத்தும், வருக! வருக! என்று பலர் பணத்தைக் கொட்டி ஆசை காட்டியும், 'லட்சியத்தை கைவிடேன்! துரோகிகளை ஒழித்துக் கட்டியே தருவேன் என்று முழக்கம் (ஆறு திங்களில் நான்கு முறையேனும்) செய்து கொண்டும், நாள் தவறாமல் எழுதிக்கொண்டும்வரும் சிலம்புக் கூட்டத்தார், என்னைக் கேலி பேசியும் பெரியாரை பின்பற்றும் ''பேதமை''யை எடுத்து விளக்கிக் கொண்டும் இதை நான் உட்கொள்வதற்காக வேண்டி, இடையிடையே சுவையுள்ள விருந்து (அன்புடன் தான், மறக்க முடியுமா) அளித்துக்கொண்டும் இருந்த நாட்கள்! திடீரென்று ஒரு தினம் பம்பாயிலிருந்து எனக்கோர் தந்தி வந்தது. ''உடனே கிளம்பி ஹரித்துவாரம் வந்து சேரவும்'' என்று. தந்தி தந்தவர் பெரியார்; அவர் பம்பாய் பகுதி சென்று அங்கிருந்து ஹரித்துவாரம் சென்றுவிட்டு, வடநாட்டிலே வேறு பல ஊர் போக திட்டம் இட்டு இருந்தார் போலிருக்கிறது, எனக்கென்ன

தெரியும்? யாருக்குத்தான், எப்போதுதான் அவர் போடும் திட்டம்' அவராகச் சொல்லுமுன் தெரிகிறது?

ஹரித்துவாரம் வந்து சேர்—எனக்கு இப்படி ஒரு தந்தி.

என் சுபாவம், 'உனக்குத் தெரியும், ஏன், ஏறக்குறைய கழகத் தோழர்கள் அனைவருக்கும் தெரிந்ததுதானே. பக்கத்திலே உள்ள ஆற்காடு போவதானாலும் நாலு நண்பர்கள்கூட வேண்டுமே எனக்கு. அப்படிப் பழகிப்போன என்னை ஹஹரித்துவாரம் வரச் சொல்கிறார்: என்ன செய்வது? கிளம்பினேன்; தோழர் குருசாமி இரயிலடி வந்திருப்பதாக நினைவு.

பத்து நாட்கள் ஹரித்துவாரத்தில் இருந்தோம், ஒரு நபர் வீட்டில்.

அவர் காலஞ் சென்ற பேரறிஞர் எம்.என். ராய் அவர்களின் இயக்கத்தவர். எனவே, எங்களை அன்புடன் தமது இல்லத்தில் வைத்து, உபசரித்தார்.

உங்களில் பலருக்குத் தெரிந்திராது தம்பி! பெரியார் அங்குதான், வால்மீகி இராமாயணம் பற்றிய குறிப்புரைகள் தயாரித்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதின கவனம் இருக்கிறது.

அந்த ஹரித்துவாரம் ''சாதுக்களின்'' கோட்டை! எந்தத் தெருவுக்குச் சென்றாலும், சந்நியாசிகள்! எவ்வளவு ''கம்பீரமாக'' நடந்து செல்கிறார்கள் தெரியுமா! அவர்களும் சரி, கொழுத்துக் கிடக்கும் பெரிய பெரிய பசுக்களும் சரி, ஹரித்துவாரத்து வீதிகளிலே நடமாடும் உரிமை தமக்கே என்ற தீர்மானத்துடன் இருப்பது போலத்தான் தோன்றும்.

---

சமுதாய அடக்குமுறையோடு ஒப்பிடுகையில், அரசியல் அடக்குமுறை என்பது ஒன்றுமில்லை; எனவே, சமுதாயத்தை எதிர்த்துப் போராடும் சீர்திருத்தவாதி, அரசியல்வாதியைக் காட்டிலும் துணிச்சல் மிக்கவன் ஆவான்.

உளப்பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் இல்லாமல் மக்கள் செயல்படுகின்ற அமைப்பில் எந்தவிதமான திறமை இருக்க முடியும்?

கங்கை—நடுப்பகல் இரண்டு மணிக்குக் கால் வைத்தாலும்: ''ஐஸ்'' போல இருக்கிறது, கொட்டுகிறது.

ஹரித்துவாரத்தில், ஆற்றோரத்தில் அழகான சோலைகள் பழ முதிர் சோலைகள்! சோலைகளை வேலிகளாகக் கொண்ட பெரிய மடங்கள்—ஒவ்வொரு மடத்திலும் நூற்றுக்கணக்கான சாமியார்கள் உலகமாயையை மிக நன்றாக உணர்ந்து உலகார்க்கு உபதேசம் செய்யும் ''புனிதத் தொண்டு'' புரியும் அவர்களுக்காக, நாள்தோறும் மூட்டை மூட்டையாகக் கோதுமை மாவும், டின் டின்னாக மணம் கமழும் நெய்யும்! இந்த மடங்களில் ஒரு குறையும் இருத்தல் ஆகாது என்பதற்காக ஏராளமான ''சொத்து'' சாசனப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாலை வேளைகளிலே பெரியார் உலாவச் செல்வார். சாலையில் உடன் நான் செல்வேன். வெண்ணிறத் தாடி; பொன்னிற மேனி; ஆரஞ்சு நிறச் சால்வை, நான் கொட்டும் குளிருக்குப் பயந்து முரட்டுத் துணிச் சட்டை போட்டுக்கொண்டு, அதற்குள் கரங்களை விட்டுக் கொண்டு, கை கட்டிய வண்ணம் அவர் பின்னால், சாது சந்நியாசி களைக் காண்பதையே வேலையாகக் கொண்ட அந்த நாட்டு மக்கள், ஹரித்துவார் இதுவரை காணாத மகிமை பொருந்திய குருமகான் தன் பிரதம சீடனுடன் செல்கிறார் என்று எண்ணிக்கொண்டு பக்தி யுடன் கைகூப்பித் தொழுவர். இப்போதும் மனக்கண் முன்னால் அக்காட்சியைக் காண முடிகிறது; எங்களுடன் மணி இருப்பார். ஓஹோஹோ! மணி என்றதும், ஆச்சரியத்தால் கண்களை அகலத் திறக்கிறாயா தம்பி! விடுதலை அச்சகத்தில் மணி என்றோர் அச்சுக் கோர்ப்போர் இருந்தார். அவர் பெரியாருக்குப் பணிவிடை செய் வதற்காக வந்திருந்த அவரைக் குறிப்பிட்டேன்; அப்போது ஈ.வெ.ரா. மணியம்மையார் பற்றிய நிழல் உருவச் செய்தியும் கிடையாது.

இவ்வளவு மடங்கள்—கவாத்துக் கொடுத்து, காக்கி உடை அணி வித்து, கையில் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டால், பட்டாளத்திலே ''சர்தார்களாக''க்—கூடிய உடல் கட்டமைந்த சன்னியாசிகள் கூட்டம் கூட்டமாக—அவர்களின் பராமரிப்புக்காக இலட்சக்கணக்கில்

மனத்தில் மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போது தான் நம்நாடு முன் னேறும்.

—அறிஞர் அண்ணா.

பொருட்செலவு—அவர்களோ இகலோகத்தின் இழிதன்மையைப் பற்றிப் பரலோகத்தின் பெருமையைப் பற்றியும் உபதேசம் செய்த இந்த விசித்திரக் காட்சி, என் உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்களைக் கிளறும். இப்படியும் ஒரு நாடா? ஊரார் உழைப்பைத் தின்று கொழுத்துக்கொண்டு, முக்திக்கு வழி காட்டுவதாகக் கூறிக்கொண்டு, ஒரு ''பட்டாளமே'' இருக்கிறதே! எந்த நாட்டிலாவது இப்படி ஒரு பயனற்ற கூட்டத்தை அனுமதிப்பார்களா! இங்கு அடிதொழுது கொண்டிருப்பதைப் பெறற்கரிய பேறு என்றல்லவா கருதுகிறார்கள். வேதனை நிரம்பிய விசித்திரமாக இருக்கிறதே, என்றெல்லாம் எண்ணிக் கொள்வேன்.

சம்சாரி உழைத்து
சன்யாசி கொழுக்க

தருமம் புரி எனல் ஆஸ்திகமா?

அது சரியில்லை என்பது நாஸ்திகமா?

என்று உடுமலை நாராயணகவி ''சொர்க்கவாசல்'' படத்துக்குப் பாடல் தீட்டினார். கே.ஆர். ராமசாமி பாடினார். நண்பர்கள் சிலரும் கேட்டு இன்புற்றோம். நீ கேட்டிருக்க முடியாது தம்பி. சென்சார் அதைக் கத்தரித்து விட்டு பாரத பண்பை காப்பாற்றி விட்டதாகப் பூரிப்படைந்தனர். அந்த பாடலும் அதற்குரிய காட்சியையும் தயாரிக்கப்பட்டபோது எனக்கு ஹரித்துவாரக் காட்சி நன்றாகத் தெரிந்தது.

நேருபண்டிதருக்கு, இந்த 'மாமிசமலைகளை'க் கண்டித்தும், உண்மையிலேயே கோபம் கொந்தளிக்கிறது. ஆனால், பாமர மக்களின் அன்பை இழக்க நேரிடுமே என்ற அச்சம்.........

தம்பிக்கு 12—6—1955

பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் படேல் கிழக்கு ஆப்பிரிக்கா சென்று, அங்கு வாழும் இந்தியர்களிடம் பல இலட்ச

நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டும், தன்மானம் உடையவர்களாய் வாழவேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் வேண்டும். இவற்றைச்செய்தால் நாம் உயர்வது உறுதி',

ரூபாய் வசூல் செய்து கொண்டு வந்திருக்கிறார், இந்த பவனம் அமைக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்.

இலட்சக் கணக்கிலே பணம் தந்து, பட்டீலை மகிழ்விக்க செய்ய முடிகிறது, வடவரால்.

கண்ணீரைத்தான் காண்கிறோம் இலங்கையில் இடர்ப்படும் திராவிடரிடம்—அதைக்காண வெட்கமும் வேதனையும் அடைகிறோம்.

அவர்களுக்கென்று இங்கோர் தாயகம் இருக்கிறது.

எல்லா வளமும் கொஞ்சும் நாடு.

எனினும் அவர்களுக்கு இங்கு ஒரு கவளம் சோறு இல்லை.

அவர்கள் படும் அவதியைத் துடைத்திடும் ஆற்றல் படைத்த ஒரு சர்க்கார் இல்லை.

அவர்கள் சொந்த நாட்டிற்கே அகதிகளாக வந்து சேரும்போது விதவை மகளைக் கட்டித் தழுவி விம்மிடும் நலிவுற்ற தாய் போலாகிறது நாடு.

வாழ்கிறார்கள் வளமாக வெளி நாடுகளிலேயும், வடவ அந்தர் வசீகரத்தின் மெருகு கெடாதிருக்கச் செய்வதற்காக பம்பாயில் பவனம் கட்டுகிறார் பட்டீல்,

'தாராவி எங்கே இருக்கிறது?—' என்று நான் கேட்டேன்—என்னை அழைத்துச் சென்ற பெரியாரிடம் பம்பாய் சுயமரியாதை இயக்கத் தோழர்களின் அழைப்பின் பேரில் அங்கு போயிருந்தோம்.

'தாராவியா...?' என்று கேட்டபடி, இப்புறமும் அப்புறமும் பார்த்தார் அவருடைய நாசி விரிந்தது, குவிந்தது என்ன இது என்று நான் கூர்ந்து கவனித்தேன். இதோ அருகாமையில் தான் தாரவி-நாற்ற மடிக்கிறதே, தெரியவில்லையா?' என்று கேட்டார்-கேட்டுவிட்டு விளக்கமளித்தார். தோல் பதனிடுகிறார்கள், அந்தத் துர்நாற்றம் அடிக்கிறது. இப்படிம்பட்ட இடம்தானே நம் மக்களுக்குக் கிடைத்திருக்கும், அதனால் தான் தாராவி அருகாமையில் இருக்கிறது என்று கூறினேன் என்றார். உண்மையாகவே, தாராவியை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

திராவிடர் வடநாடு ஆனாலும் இலங்கையானாலும் சென்று வாழ்கின்றார்கள் என்பதல்ல பொருள், வதைபடுகிறார்கள்.

17—7—1955

......சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து ஆண்டு இருபது ஆகிறது என்று பெருமையுடன் கூறிக்கொண்டு அந்த இயக்கம் சமூகப் புரட்சி இயக்கம் புத்துலக அமைப்புக்கான கருவி என்பதை சரியாக அறிந்து கொள்ளாமல் சுயமரியாதை இயக்கம் என்றால பாப்பனரின் உச்சிக்குடுமியையும் பிச்சைக் கொள்கைகளையும், நச்சு நினைப்பையும், தவனை நடையையும் கேலி செய்வது ஒன்றையே பெரு நோக்கமாக முழு நோக்கமாகக் கொண்டது. வேறெதுவும் இல்லை என்று கருதும் தோழர்கள் இருக்கக்கண்டு நான் மன வேதனைப்பட்டதுண்டு.

திராவிடநாடு 18—5—1947

வள்ளலாருடைய எளிய தோற்றத்திலே எனக்குப் பற்று உண்டு.

மேடைப்பேச்சு 5—10—1967

நான் அவரோடு (மறைமலை அடிகளாருடன்) நெருங்கிப் பழகியவன் அல்லன். அவரோடு எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பெல்லாம், இந்த நாட்டில் முதலில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பும் போராட்டத்தின்போதுதான்...

......நான் ஒன்றும் அவசரகாரனல்ல. நான் எதிலும் அவசரப்பட்டதில்லை. அவசரப்பட்டு பேசியதுமில்லை, அவசரப்பட்டு நடந்ததுமில்லை. பொறுத்துக் கொள்வேன் தாங்கிக் கொள்வேன்.

தேர்தல் கூட்டம்—காஞ்சிபுரம் 9—2—1957

நான் கடைசியாக அவரை (சிந்தனை சிற்பி மா. சிங்காரவேலர்) கண்டது......இரண்டு முதியவர்களும் பெரியார் ராமசாமியும், தோழர் சிங்காரவேலரும் ஒரே மேடையில் உட்கார்ந்திருந்தனர்—20—6—1949 சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில்!

அண்ணா—நூல் சிந்தனை சிற்பி சிங்காரவேலர், ஜுலை 1949

பேராசிரியர் சேது (ப்பிள்ளை) அவர்கள் செந்தமிழின் சுவையினை நாட்டு மக்களுக்கு விருந்தாக அளித்திடும் நல்லவர். பொன்னாடை போர்த்தி அப்புலவரைப் பெருமைப்படுத்தினர். நான் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோனில்லை. எனினும் இருக்குமிடத்திருந்தே அவர் பெற்ற ஏற்றம் கண்டு இறும்பூதெய்துபவன். அவர் அறியார் என்று எண்ணுகிறேன். அவரிடம் தொடர்பு கொண்ட குழாத்தினரில் கூட—அவர் பெருமதிப்பு கொண்ட என் போன்றோர் அதிகம் இரார்......

11—9—1955

(தொடரும்)

# மடல்கள்

7—2—93 'காஞ்சி நாடு' இதழ் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவுநாள் இதழாக வெளியிட்டமைக்கு நன்றி. அறிஞர் அண்ணா அவர்களே நேரில் வந்து பேசிய உணர்வினை. அறிஞர் அண்ணாவின் கருத்தோவியம்' 'அவினாசியார் காணவேண்டிய கரட்சி 'அறிஞ அண்ணாவின் தன் வரலாறு' —ஆகிய எழுத்தோவியங்கள் கண்ட போது உணர்ந்தேன் கொஞ்சமோ நினைவுவெள்ளம், 'நால்வர் வழியே நல்வழி' ஆகிய கட்டுரைகளும், தமிழ்நிலவே' கவிதையும் பாராட்டத்தக்கன.

'இரவெல்லாம் பணியாற்றி பகலெல்லாம் உறங்கும் கலை அண்ணாவிடம் கற்றாயோ? அமைதிதரும் வெண்ணிலாவ!' என்ற —நல்ல வினா தொகுத்த புலவர் பி.சி.கணேசன் அவர்கட்கு பாராட்டுகளை தெரிவிக்க விழைகிறேன்.

'மன்னுயிரெல்லாம் துயிற்றி அளித்து இரா
என்னல்லது இல்லை துணை'

என்று காமத்துபால் தலைவி பாடுவது போன்று உலகத்து உயிர்களெல்லாம் உறங்கச் செய்த நிலவுக்கு, அண்ணாவைத்தவிர வேறு துணையில்லாத நிலையில்—அவர் பணியாற்றினார். இன்று நிலவுக்கு அந்த துணையில்லை. நிலவு மயக்கத்தில் உறங்காமல் பணியாற்றிய அண்ணா இல்லாததால், பகல் இரவு எப்போதும் 'மதி' மயக்கத்தில் ஆழ்ந்து விட்டனர்—தமிழர்! அந்த மயக்கம் தீர அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை மிக்க சிரமத்துடன், பொருள் ஈட்டல் எண்ணமின்றி வழங்கும் தங்கட்கு மிக்க நன்றி!

நன்றியுடன்,
இசை இறை சேரலாதன்
சென்னை 20—2—93

ர. வேணுகோபால்சாமி, M.A.M.Phil, மாணவர்
திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்,
H-3, புதிய காலனி. அன்னதானப்பட்டி, சேலம்-2.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்,

75 ஆண்டுகால மகத்தான வரலாற்றுக்குரியவர்கள் நாம். இந்த

நீண்ட நெடிய காலத்தில் நாம் கொஞ்சம் திசைமாறிப் போனதும் உண்மைதான். இந்த உண்மையை அப்பட்டமாக ஒப்புக்கொண்டு தந்தைப் பெரியார் அவர்கள் ஊட்டிய சுயமரியாதை உணர்வையும் பேரறிஞர் அண்ணா அவர்களூட்டிய திராவிட - தமிழ் உணர்வையும் இன்றைய தலைமுறையினர் அறியும் வகையில் விடுதலை, உண்மை, முரசொலி, தினகரன் போன்ற இதழ்கள் பரப்பி வருகின்றன. அதன் வரிசையில் காஞ்சி நாடும் புதியவரவாகச் சேர்ந்துள்ளதை வரவேற்கின்றேன்.

அண்ணனின் கருத்தோவியங்களை மிகச்சிறப்பான முறையில் மேன் மேலும் வெளியிட்டு இன எழுச்சிக்குப்பாடுபட வேண்டும். தன்னலமற்ற தியாக மறவர்களை உருவாக்க வேண்டும். என்ற புனிதமான பணியினை காஞ்சி நாடு ஆற்றிட வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

நான் சந்தாதாரர் இல்லை என்றாலும் சேலம் மந்தியப் பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு நூற் விற்பனைக் கூடத்திலிருந்து அனைத்து இதழ்களையும் பெற்று படித்து வருகிறேன்,

வாழ்த்துகிறேன் வாழ்க் தமிழ்

இப்படிக்கு உண்மையுள்ள,
ர. வேணிகோபால்சாமி
சேலம்—16—2—93

217209

## காஞ்சி நாடு வாழ்க

அண்ணாவிஸ் பாதை யேகி
அருங்கலைஞர் நெறியில் வாழும்
பண்பாளர் பரிமளச் செல்வர்
பாங்குடனே அளிக்கும் ஏடு;
வண்ணமலர் 'காஞ்சி நாடு'!
வளமார்ந்த புரட்சிக் கருத்தால்,
எண்ணமலர் பூக்க வைக்கும்
எழிற் 'காஞ்சி நாடு' வாழ்க!

இனமானக் கவிஞர் இடிமுரசார்

## ஜெய் புத்தம்

அன்புள்ள அய்யா! வணக்கம், 'காஞ்சி நாடு' இதழ் தொடர்ந்து படித்து வருகின்றேன், சமுதாய சிந்தனை சிற்பி தமிழன்னையின்

(இதன் தொடர்ச்சி 32-ம் பக்கம் பார்க்க)

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER FORM IV (See Rule 8)

## KANCHI NADU, Tamil Nadu

| | | | |
|---|---|---|---|
| 1 | Place of Publication | : | No. 7, Avenue Road, Nungambakkam, Madras-600 034. |
| 2 | Periodicity of the Publication: | | Monthly |
| 3 | Printers Name | : | C. R. Kannan |
| | Nationality | : | Indian |
| | Addiess | : | 27, Palayakkaran Cross Street, Madras-600 024. |
| 4 | Publisher Name | : | Malarvannan Annadurai |
| | Nationality | : | Indian |
| | Address | : | 7, Avenue Road, Nungambakkam, Madras-600 034. |
| 5 | Editors Name | : | Malarvannan, |
| | Nationality | : | Indian |
| | Address | : | 7, Avenue Road. Nungambakkam, Madras-600 034. |

I, Malarvannan hereby declare teat the particulars given above are true to the best of my knowledge and belief.

dt. 26th March 1993

Sgd : Malarvannan Annadurai
Signature of Applicant.

நன்கொடை ரூ. 2-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி
நாடு

(30-ம் பக்க தொடர்ச்சி)

தலைமகன் பேறறிஞர் அண்ணாவின் கருத்து மணிகள் படிப்பதற்கு சமுதாய விடுதலைக்கு பயன் உள்ளதாக அமைகின்றது. வருகின்ற ஏப்ரல் மாத 'காஞ்சி நாடு' அம்பேத்காரும், அண்ணாவும் என்ற தலைப்பில் கட்டுரை வெளியிடுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன், 'காஞ்சி நாடு' இதழ் வெற்றி பெறட்டும்.

P. C. சம்பத்
தலைவர் டாக்டர். அம்பேத்கார் நற்பணி மன்றம், சேலம்
17—2—93

அறிஞர் அண்ணா நினைவு நாள் 'காஞ்சி நாடு' இதழ் படித்தேன் தமிழைச் சுவைத்தேன், அண்ணாவின் இளமைக்கால புகைப்படங்கள், கடிதங்கள், பொன் மொழிகள் முதலியவைகளைத் தொடர்ந்து அதிக அளவில் வெளியிட வேண்டுகிறேன். பேரறிஞரின் நினைவு நாளை யொட்டி எங்கள் ஊரிலும் இலக்கியப் பேரவைத் தொடங்க விரும்புகிறேன்.

வின்சென்ட் இரா. இராஜேந்திரன்
அறந்தாங்கி 16—2—93

ஐயா, வணக்கம்.

7—2—93 காஞ்சி நாடு படித்து ரசித்து மகிழ்வுற்றேன். படைப்புகள் அனைத்தும் அருமை, அதை படித்து மகிழ்ந்ததில் எனக்குப் பெருமை, 'அண்ணா தன் வரலாறு' 'நாடகமும்' படித்ததில் கருத்துக்கள் மனதை ஈர்க்கிறது. சிந்தனைகள் எண்ணத்தை மெருகுற செய்தது.

எஸ். பி. சந்திரசேகரன், சென்னை.

---

ஆசிரியர், வெளியிடுபவர் : மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர் : C. R. கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை-24.

பெறுநர் :
DIRECTOR
TAMIL NADU ARCHIVES
MADRAS - 8.

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை,
7. அவின்யு சாலை,
சென்னை-600 034.